உ

சிவமயம்

# திருக் கதிர்காம முருகன் வழிநடைக் கும்மி

## பஜனைப் பாடல்கள்



ஆக்கம்: கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



ஓம் விக்கின விநாயகா நமஹ

## காப்பு

கரும்பும் இளநீரும் காரெள்ளும் செந்தேனும்
விரும்பும் அவல்பலமும் மென்மேல் - அருந்திக்
குணமுடையராய் வந்து குற்றங்கள் தீர்க்கும்
கணபதியே இக்கதைக்குக் காப்பு

# திருமுருகன் வழிநடைக்கும்மி

ஆக்கம்

புலவர் நாகமணி விநாயகமூர்த்தி

15.03.2015 விலை - 130/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
**வேலே துணை**

குமரன் அருள்



வேல் உண்டு வினை இல்லை

விழிக்குத் துணை திரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே

(கந்தர் அலங்காரம்)

**பெரியோர்களே**

இக்கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாகிய கந்தவேள்ப் பெருமான் நம் ஈழ வளநாட்டின் கதிர் காமத்தென்பதி திருத்தலத்தில் இருந்து தன்னை நாடி வரும் அடியார்க்கு நலி தீர்த்து நன்னருள் புரிகின்றார். இப்பெருமானின் புண்ணிய தீர்த்தமாக மாணிக்க கங்கை முதன்மை பெறுகின்றது. இவ் ஆடிமாதத் தீர்த்த மாட ஆயிரமாயிரம் அடியார்கள் பாதநடையாக கரைவழிப் பாதையூடாக செல்வதை காணலாம். இப்பாத நடை ஓர் ஆத்மீகப் பயணமாகும். மனதை ஒருநிலைப்படுத்தி உணவொறுத்து மனத்தூய்மையுடன் முருகன் நாமத்தை பாடிப்பரவி கூடிக்குலாவி செல்வதற்கு இந்நூல் ஏதுவாக இருக்கும் என நம்புகின்றேன்.

**மெய்யடியார்களே!**

அடியேனின் முந்தைய வெளியீடாகிய திருமுருகன் திருப்பாமாலையில் இடம்பெற்ற பாதவளிநடைக்கும்மி பஜனைப்பாடல் உந்துதல் ஆகிய மூன்றையும் ஒன்றாக்கி இந்நூலுக்கு திருக்கதிர்காமமுருகன் வழிநடைக்கும்மி பஜனைப்பாடல் எனத் திருநாமம் சூட்டி சிறப்பித்து தங்கள் கரம் தவளத் தந்திருக்கின்றேன். தாங்கள் இப்பாடல்களை ஆலயங்களிலும் தனிவழி பாதயாத்திரையிலும் நீழ நினைத்துருகிப் பாடிப்பணிந்து குமரன் தாழ் சரணடைவீராக.

வணக்கம்



இவ்வண்ணம்,
ஸ்கந்த முருகன் அடியான
ஈஸ்வரி மூர்த்தி

சேனைக்குடியிருப்பு.
15 - 03 - 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

# திருக்கதிர்காம முருகன் வழிநடைக் கும்மி



தரு

*தந்தனத் தான தன தான தன*
*தான தந்தனத் தானா - னா*
*தந்தனத் தான தன தான தன*
*தான தந்தனத் தானா - னா*

பாடல்

கானக்குறத்தி மணவாளன் - கந்த
சாமிமேல் யான்கும்மி பாடுதற்கு
மோனக்கை வேழமுகவன் - கணபதி
முன்னே நடந்திட வாருமையா (தந்தனத்தான)

வாருமையா வடிவேலவனே - கவி
தாருமையா சிவபண்டிதனே
காருமையா ஈராறு கண்களினால் - எனைப்
பாருமையா இந்தப் பாலகனை (தந்தனத்தான)

பாலகன் ஆன நல் கோபாலனே - திருப்
பூதகி தன்னை உதைத்தவனே
ஆலிலை மீது அமர்ந்தவனே - மண்ணை
ஓரடியாக அளந்தவனே (தந்தனத்தான)

ஓரடி தன்னில் நல் ஓங்காரம் - சிவ
ஈரடி ரென்றிடும் ரீங்காரம்
மூவடி ஆம் சிவ சம்புவே - கண
நாதனே உம்மை நாம் மறவோம் (தந்தனத்தான)

வாணி சரஸ்வதி எந்தாயே - மாதா
வந்து என் நாவில் குடியிருந்து
வேணி அணிந்தவன் மைந்தனைப் பாடிட
வேண்டும் வரம்பல தாருமம்மா (தந்தனத்தான)

தாரகாசூரனைக் கொன்றவனே - உன்னை
நாடிநடந்திட எண்ணங்கொண்டு
பாடியே நாம் வரும் வேளையிலும் - எங்கள்
பக்கத்தில் நில்லப்பா வேலுடனே (தந்தனத்தான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கடனை முடித்துக்கொண்டு - சுவாமி
காவி உடுத்து வெண்ணீறணிந்து
வாலை திரிபுர மாலை இட்டுக் - கொண்டு
வேலனைப் பாடுங்கோ சாமிகளே (தந்தனத்தான)

வெற்றிக் குமரன் வெருகல்பதியுறை - திருச்
சித்திரவேலன் நல் சித்தாண்டியான்
மன்னனாம் தேவர்க்கதிபதியான - எம்
மண்டூரான் நல்லைவாழ் செந்தூரன் (தந்தனத்தான)

ஏழுமலை கந்தன் வாழுமலை - சுவாமி
இடும்பன் கடம்பன் இருந்தமலை
ஓமென்றொலிக்கும் உகந்தைமலைதனைக்
உற்று நோக்கிடு சாமிகளே (தந்தனத்தான)

நோக்கிப் பணிந்தோர்க்கு துன்பமில்லை - சாமி
நோன்புடன் ஆண் பெண் அடியார்கள்
நீக்கற சேவைகள் தொண்டுபுரிதலை
நின்றுபார் சாமியின் ஆலயம்பார் (தந்தனத்தான)

ஆலயம் அப்பனின் சோலை நடுவிலே நல்
அழகான வீதியும் வேம்புகளும்
வேலவர் கோயிலைச் சுற்றிடுவோம் - மன
வேதனை தன்னையும் கூறிடுவோம் (தந்தனத்தான)

கூறிடுவோம் மலை ஏறிடுவோம் - சிறு
குன்று சுனையில் முழுகிடுவோம்
நீறிடுவோம் வள்ளி கோயில் எதிர் சென்று
நெற்றியில் மஞ்சள் அரைத்து வைப்போம் (தந்தனத்தான)

மஞ்சள் நீர் வள்ளியும் ஆடிடவும் - கடல்
சஞ்சலம் பொங்கியே ஓசையிட
அஞ்சலெனக் கை அமர்த்தவே - வேலனும்
துஞ்சினதாம் அலை சாமிகளே (தந்தனத்தான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமிகளே சூடம் ஏற்றிடுவோம் - சாதப்
பொங்கலும் இட்டு வணங்கிடுவோம்
நாற்றிசை போற்றும் உகந்தை மலையானை
நம்பிக்கை கொண்டு பணிந்திடுவோம் (தந்தனத்தான)

பணிந்திடு துன்பம் பறந்தோடும் மற்றும்
பாவப்பிணி குன்மநோய் அகலும்
துணிந்திடு சாமி உனை நம்பினேன் என்று
சொல்லிவை வெள்ளை நல் உள்ளமதில் (தந்தனதான)

வெள்ளை எனும் நாவல் கண்ணைக் - கவருமே
வள்ளல் விநாயகன் வாழ்ந்திருக்கார்
உன்னையும் என்னையும் ஆட்டித் - திரிகிற
உகந்தை முருகனைக் கண்டிடலாம் (தந்தனதான)

கண்டிடலாம் சாமி உண்டிடலாம் - வழி
சென்றிடலாம் சுமைதானெடுப்பீர்
பெண்டீரெல்லாம் சாமி என்று நினைத்திடு
போடுங்கோ சாமி வழிநடங்கோ (தந்தனதான)

கந்தனை வேண்டி நீர் பாடுங்கோ சாமிகள் - பல
காத வழிகளும் தான் துலைய
சிந்தையில் வீட்டை நினையாதே - சாமி
சீக்கிரம் உன்னைத் திருப்பிடுவார் (தந்தனதான)

வெட்டவெளி தனைப் பார் சாமி - எங்கள்
வேலன் ஒளிதனைக் காட்டிடுவார்
வட்டையாம் வாகூர கிட்டடியில் - வரும்
வாருங்கோ சாமிகள் போய்விடுவோம் (தந்தனதான)

சூரன் உடல் அறவிட்டவேலாம் - அது
வாகூர வட்டைமலை பிளந்து
நாவாரப் பாடுங்கோ சாமிகளே - இவை
வாகூர வட்டைதான் பாருங்களே (தந்தனதான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்துக்குலுங்கும் நல்நாவைகளும் - சாமி
ஏற்ற கிணறு எதிர்த் தோன்றும்
மூட்டையிறைக்கிடு சாமிகளே தண்ணீர்
முன்போகும் சாமி போய் அள்ளுங்களே (தந்தனதான)

அள்ளிக் குடிக்க கொடுசாமி நாங்கள்
ஆறி அமர இடம் பாரு
தள்ளிச் சென்றால் சிறு கொள்ளியும் தண்ணீரும்
தானெடுத்தும் குளித்தே வருவோம் (தந்தனதான)

வந்து இருந்து துதிபாடு சாமி முருகன்
வாலையும் நாவினில் நின்றாடும்
சொந்தம் பந்தம் நமக் கொன்றுமில்லை சாமி
தூங்கிடு வேலே துணை நமக்கு (தந்தனதான)

வேலே துணை என் றெழுந்திடுங்கோ சாமி
வெள்ளணையில் நடைநல்லதுதான்
ஆளுக்கு பின்னோர் ஓர் ஆளாகவந்தாலே
அருகினில் காட்டுமுள் சிக்காது (தந்தனதான)

வெள்ளி முள்ளுச் சோலை பாருங்கோ - சாமிகள்
வள்ளி கணவன் வழிதனிலே
தெள்ளிக் கொடுக்கத் தினைமாவும் - தேனும்
திண்டாராம் பண்டாரம் சாமிகளே (தந்தனதான)

மாயாவா என்று மயில் கூவும் அரி
கேசவா என்று கிளி பேசும்
வீசிடும் தென்றல் மிக விரையும் சாமி
கூசாது வேலனைக் கூப்பிடுங்கோ (தந்தனதான)

குஞ்சரக் கூட்டத்தைப் பார் சாமி - காளை
கூட்டமுடன் நின்று ஓடுதுபார்
அஞ்சாது கந்தாபோ என்றிடவே - யானை
அப்பாலே போய்விடும் சாமிகளே (தந்தனதான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திடுவார் காலை மூன்று குளம் - தாண்டி
வந்தெதிர் தோன்றிடும் பூமுனையும்
காமன் எரித்த சிவன் போலப்பட்சிகள்
காட்சியைப் பாருங்கோ சாமிகளே (தந்தனதான)

போற்றிக் குமுக்கனில் தீர்த்தமாடிச் - சாமி
ஏற்ற திருநீறு இட்டுக்கொண்டு
பார்பதி பத்தினி தெய்வத்தின் கோயிலை
பாருங்கோ ஆடுங்கோ சாமிகளே (தந்தனதான)

ஆடியே வந்து நல்வாக் கருள்வாள் - மாரி
ஆனந்த தாண்டவமே புரிவாள்
தேடியுங் காணாத காவல் தெய்வம் - சாமி
சீனி கடலை அவல் படைப்போம் (தந்தனதான)

படைத்த நல் பொங்கல் சுவை தேனாம் - சாமி
பார்க்க உயர்ந்த மரநிழலாம்
நடைதனில் நோய் பிணி வாராமல் தாய்தனை
நமஸ்கரித்துப் போவோம் சாமிகளே (தந்தனதான)

போம்பொழுது சுமை மாறிக்கொள்ளு சாமி
புண்ணியமுண்டாம் உனக்கு நன்றாம்
வீம்புகள் ஆணவம் விட்டொழித்தால் சாமி
நீங்கிடும் மாய்கை உன் நெஞ்சை விட்டே (தந்தனதான)

விட்டிடு ஆசையைப் பற்றுவை சாமி - உன்
விரதமும் நேர்த்தியும் வீணாகும்
எட்டிநட சாமி வேல் முருகா என்று
என்னம்மை மாரி துணை நமக்கு (தந்தனதான)

மாரிபலவேஷம் கொண்டவளாம் இந்த
மானிலம் தன்னையும் ஆள்பவளாம்
பாரில் இடர்பிணி தீர்ப்பவளாம் சாமி
பாத நடைக்கும் இவள் துணையாம். (தந்தனதான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைதுணை என நம்பிடுங்கோ சாமி
ஆபத்தை காத்திடும் தெய்வமன்றோ
இன்னும் கனத் தநடைஇருக்குச் சாமி
இப்பாதை தப்பாமல் வாருங்களே (தந்தனதான)

ஒற்றையடிப்பாதை மெத்தவுண்டு - சாமி
ஓடைகள் ஆறுகள் புற்றரைகள்
கல்தரை செம்மண் கலந்த தரைகளும்
காணலாம் கந்தன் வழிதனிலே (தந்தனதான)

தேக்கு முதிரை சிறுகாடு - சாமி
தேடி எடுப்போம் விளாங்கனிகள்
மூட்டையின் பாரங்கள் தோன்றாது - சாமி
மூவிரு கையனைப்பாடுங்களே (தந்தனதான)

உப்பாறுதன்னில் முதலை உண்டு - சாமி
அப்பாலே தாண்ட நல் நாவலடி
ஓடிப் பிடுங்குங்கோ உப்புருவி - சாமி
ஓர்சொதி ராவைக்கு காய்ச்சுதற்கு (தந்தனதான)

காய்ச்சிடுவோம் சோறு ஆக்கிடுவோம் சாமி
கட்டை எடுத்துத் தீ மூட்டிடுவோம்
பாய்ச்சிய சூலமும் நாவலடிச் சிவன்
பந்தலும் சாமிக் கெதிர் கிணறும் (தந்தனதான)

கிணற்றினில் நற்தண்ணீர் உண்டு சாமி நாங்கள்
கிடந்து உறங்கி நாம் முன்னெழுவோம்
குணமுள்ள சாமிகாள் தேனீர் வைத்து எடு
குடித்து முடித்து வெளிக் கிடுவோம் (தந்தனதான)

வெளிக்கிடு முன்சூடம் ஏற்றிடு சாமிகாள்
வேலன் முருகனைப் பாடிக்கொள்ளு
வாளியும் துலையாத பத்தும் எதிர்வரும்
வாருங்கோ சாமிகாள் சென்றிவோம் (தந்தனதான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றிடும் போதினில் உந்துதல் பாடிக் கொள்
தீர நடையும் கால் வேகம் கொள்ளும்
வந்திடும் பாதை மணலும் மலை மேடும்
வாருங்கோ சாமி நிழல் இருப்போம் (தந்தனதான)

இருந்துகுடித்து இளைப்பாறு சாமி
என்னப்பன் சோதனை பண்ணிடுவார்
தாகமும் சோர்வும் உனைவாட்டும் சாமி
சண்முக நாதனைக் கூப்பிடுங்கோ (தந்தனதான)

கூப்பிட்டுத் தண்ணீர் கொடு சாமி இந்த
கோலக் குமரன் மனங் குளிர
சாப்பிட ஏதும் கொடுத்தாலும் உந்தன்
சந்ததி வாழும் நெடுங்காலம் (தந்தனதான)

காலம் கலி காலத் தெய்வமப்பா சாமி
கந்தவேள் காலைப் பிடித்துக் கொண்டால்
மாலையும் திங்கள் மறையும் முதல் சாமி
வாருங்கோ கள்ள வியாழன் செல்வோம் (தந்தனதான)

கள்ளவியாழனில் கால் கழுவி - சாமி
கிண்ணை விளாங்கனி தானுடைத்து
வள்ளல் வடி வேலனைப் போற்றியே இவ்விடம்
உள்ளமுந்து கொள்வோம் சாமிகளே (தந்தனதான)

உள்ளமுந்து கொண்டு மெள்ள எழு சாமி
ஓர்மூச்சி நல்ல நடை நடந்தால்
பள்ளமும் முள்ளி வழியும் தடுமாறும் ஒரு
பக்கமாய் வாருங்கோ சாமிகளே (தந்தனதான)

பக்கம் திரும்பிட ஏலாது சாமி
பாரச்சுமையின் வலு வேகம்
திக்கெங்கும் போற்றும் அருள் குமரன் எம்மை
சீவிக்கிறார் நம்மை சோதிக்கிறார் (தந்தனதான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோள்கள் கடுத்துவலி ஏறும் சுமை
தூக்கி எறிய நினையாதே
வாதைப்படுத்தும் எந் நோய்களும் உந்தனை
வந்தணுகாது பார் சாமிகளே (தந்தனதான)

வந்தணுகாது பார் சாமிகளே - உ கந்தை
வாலகுமரன் வழித்துணையாம்
பந்தமும்பாசமும் அவனிடத்தில் வைத்தால்
பாத நடைதனில் சோர்வுமில்லை (தந்தனதான)

கங்கை வியாழனில் நின்றுதங்கி சாமி
காயாம்பூமேனி மருகனிட
பக்தியோடுபல பாக்களைப் பாடியே
முத்தி கிடைக்க முழுகிடுவோம் (தந்தனதான)

யோகத்திற்கேற்ற மணலுமுண்டு சாமி
நித்திரைக்கேற்ற நிழலுமுண்டு
சம்போகம் விட்டொழிசாமிகளே நம்மை
கண்பார்க்க வேண்டும் கதிர்காமன் (தந்தனதான)

கண்பார்த்தருள்புரி தெய்வமப்பா - சாமி
இந்தாபாரிங்காலே போகாதே
முந்திப்பலபேர் வழிமாறினாரென
முப்பாட்டன் சொன்னதைக் கேட்டிருக்கேன் (தந்தனதான)

ஆடுங்களே தினம் பாடுங்களே - சாமி
அரோகரா போட்டுக்கை கொட்டுங்களே
கூடுங்களே வள்ளி லோலனையே தினம்
கொண்டு நினைத்திடு சாமிகளே (தந்தனதான)

மந்திகள் பாய்ந்து மரம் தாவும் சிறு
கந்தில் இருந்து கனி அருந்தும்
குந்தி இருந்து நட சாமி வேலன்
கோலும் உன்கை தந்து கூப்பிடுவார் (தந்தனதான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்பிடு சாமி குரல் கேட்டுக் கந்தன்
கோதை என் தாய்மாரை விட்டு வர
ஆரிடம் அப்பன் இருந்தாலும் - சாமி
ஆதரவு தர வந்திடுவார் (தந்தனதான)

தந்திடுவார் சுகம் என்று நம்பு - வள்ளி
விந்தை நல் ஆற்றுக்குச் சென்றிடுமுன்
இந்த மர நிழல் ஆற்றோரம் சாமி
எங்குமில்லை அப்பன் தன்வழியில் (தந்தனதான)

வழிதனில் மான் மரை நின்றோடும் - ஆற்றில்
மாடுகள் யானைகள் நீரருந்தும்
வெயிலும் தெரியாத நற்காடு சாமி
வேணுமென்றால் நின்று பாருங்களே (தந்தனதான)

நின்றிடும் சோலை முடிவடையும் - வள்ளி
சுந்தரி ஆற்றில் நாம் தங்கிடுவோம்
நொந்த உடல் கால்கள் இந்த நல் மண்ணிலே
நோக்கிப் படுத்தால் வலி தீரும் (தந்தனதான)

தீர்ந்திடும் வள்ளியின் பேராற்றுத் - தண்ணீர்
சிவ சிவா என்று முழுகிடுவீர்
காய்ந்திட வேட்டி கசக்கிப்பிழி சாமி
சாய்ந்த மரக்கிளை தான் போடு (தந்தனதான)

போடுங்கள் கைத்தாளம் ஓசையிட சாமி
ஆடுங்கள் அப்பனும் தானாட
பாடுங்கள் கந்தனும் மாறுவேட முடன்
பக்கத்தில் கேட்டு இருப்பாராம் (தந்தனதான)

வந்தாலும் காணமுடியாது - நம்மை
எந்த விதத்திலும் சேர்த்திடுவார்
கந்தா கடம்பா கதிர்காமா என மனம்
நொந்து முருகனைக் பாடிடுவோம் (தந்தனதான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சமென வள்ளி ஆற்றை நாம் தாண்டுவோம்
பஞ்சமா பாதகம் தான் தொலைய
மிஞ்சிவருகிற வேங்கையும் வேல் கண்டால்
அஞ்சிப் பதுங்கிப் பணிந்திடுமே. (தந்தனதான)

பண்டு செய்த தோஷம் இன்று துலைந்திடும்
கண்ட இடமாம் கதிரமலை
கும்பிட்டு கற்பூரம் தேங்காயுடையுங்கோ
கோலமுருகனின் தாள்பணியுங்கோ (தந்தனதான)

தாள்பணிவோம் ஒளிசாமி மலையிலே
தானுமே அங்கே தெரியுதே பார்
வேணுமென்றால் இரு கையாலே அவல்
வேண்டி எடுத்து நீர் சாப்பிடுங்கோ (தந்தனதான)

வேண்டுமுன் சாமி மேல் பாடிக் கொள்ளு இன்னும்
தாண்ட எதிர்வரும் கட்டகாமம்
காண்டாவனமும் முடிவாகும் வழி
நீண்டு கிடப்பதைப் பாருங்களே (தந்தனதான)

பாருங்கள் பாதையும் றோட்டாகும் சாமி
வாருங்கள் கேம்பு தடை தாண்டி
காரும் கந்தா மலை கண்ட இடம் விட்டோம்
சேருவோம் கிட்டடி கட்டகாமம் (தந்தனதான)

முன்னாளில் இங்கு ஓர்கிழவி சாமி
முருகன் தன் மீது அன்பு கொண்டவளாம்
என்னாளும் மலை ஏற ஏற என்று
இருந்து நினைத்து வருத்தங் கொண்டாள் (தந்தனதான)

கொண்டாளே இதைக் கண்டமுருகனும்
கோலக் கிழவிக்கு காட்சி தந்து
அண்டர்கள் போற்றும் அமரர் பதிதன்னில்
ஆச்சியும் சென்றனள் சாமிகளே (தந்தனதான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமிகளே குளத் தாமரையும் அன்னை
தானும் இருந்த இடமிதுவே
சோவெனக் காற்று சுழன்றடிக்கும் சாமி
வாவேலா என்று மலை காண்போம் (தந்தனதான)

காணும் குளக் கரை தாமரையும் வள்ளல்
காய்களும் ஆய்ந்து சமைத்திடுவோம்
வாருங்கள் நல்ல இலுப்பை மரநிழல்
ஆறுதல்கொண்டு அமர்ந்திருப்போம். (தந்தனதான)

அமருமுன்சென்று நாம் நீராடுவோம் சாமி
ஆழத்தில் நல்ல முதலையுண்டு
விபரமறியா திறங்காதே தள்ளி
மேலேபோய் நீயும் குளியாதே. (தந்தனதான)

குளித்து குளத்தை நாம் தாண்டிவிடில் எதிர்
கோயிலும் வீர நற்சோலையடி
வழிதனில் பிள்ளையார் கோயிலுண்டு சாமி
வாருங்கோ நின்று நாம் போய்விடுவோம். (தந்தனதான)

போகுவோம் காலையில் நின்று தங்கி சாமி
பூரணமாக ஓர் சமையல் செய்து
நாரணன் மருமகனை நாளை தரிசிக்க
நாடுவோம் எல்லோரும் சாமிகளே (தந்தனதான)

சந்தனச்சோலையும் பஞ்சாட்சரமலை
தானெதிர் தோன்றிடும் சுவாமிமலை
வந்துமுன் காணும் கதிர்காமப் பதி
வாருங்கோ சாமிகள் சென்றிடலாம் (தந்தனதான)

மாமுனி தேவர்கள் இந்திரர்கள் ஆடும்
மாணிக்ககங்கையில் தீர்த்தமாடி
காணிக்கை இட்டு கற்பூரம் கொளுத்தியே
கந்தனை வேண்டுவோம் சாமிகளே (தந்தனதான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலனைச் சுற்றி வலம் வருவோம் தெய்வ
யானையின் கோயிலுக் கேகிடுவோம்
ஆலோலம் பாடிய அன்னையாம் வள்ளியின்
ஆலயம் பாருங்கோ சாமிகளே (தந்தனதான)

வாருங்கோ சாமிகாள் வள்ளியின் கோயிலுக்
கேகிடலாம் விளக்கேற்றிடலாம்
பாருங்கோ மாவுதேன் பசுவின் நெய் ஊற்றியே
நோரும் தீ வெட்டியின் நின் ஒளியை (தந்தனதான)

வேடர்விலாறு இழுத்ததுவும் கந்தன்
வேங்கை மரமாகி நின்றதுவும்
கோலக்கிழவனும் கால் சறுக்கி விழ
கொண்டாடிப் பாடினாள் வள்ளியம்மை (தந்தனதான)

ஐங்கரன் வள்ளியை வேலர்க்கு சேர்த்தவிடம் சாமி
அமுது அவல் தினை மாவிடுங்கோ
பார்த்திடுங்கோ வள்ளி பாவை தினைப்புனம்
சேர்ந்திடுங்கோ சாமி செல்லம்விட்டு (தந்தனதான)

விட்டுக்கதிரமலைக்கு நாம் ஏறுவோம் சாமிகாள்
தட்டுத்தட்டாய்படிகட்டிருக்கார்
பெட்டி உடையுங்கோ சாமிகளே கற்பூர
கட்டியைக் கல்லில் மேல் ஏற்றுங்களே (தந்தனதான)

ஏற்றுங்கள் ஏறுங்கள் போற்றுங்கள் வேலனை
என்னப்பன் மாமலை உச்சியைப்பார்
பாருங்கள் சோதி விளக்கையும் காணுங்கள்
பார்பதி புத்திரன் மாமலையில் (தந்தனதான)

மாமலைவிட்டு வரும்போது சாமி
பாமாலை ஏதும் நீர் பாடிடுவீர்
காமாளை வெப்பு வெண்சோகையும் காய்ச்சலும்
கந்தன் மலை ஏறத் தீர்ந்திடுமே (தந்தனதான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ந்திடுமே அப்பன் தீர்த்த மாடச்சாமி
வேர்ந்திடுமே திருநீறு கண்டாய்
கூர்ந்து கவனி எதிர்வரும் சாமியை
கும்பிட்டுக் கொள்ளுங்கள் சாமிகளே (தந்தனதான)

கும்பிட்டு நேர்த்திகள் வைத்துக்கொள்ளு சாமி
எம்பிட்டுத் தூரமென்றெண்ணாதே
அன்பு கொண்டு நடை கும்மியைப் பாடினால்
ஆனந்தம் ஆனந்தம் சாமிகளே (தந்தனதான)

ஆனந்தம் கொண்டெழுப் பாடிடுவீர் சாமி
அப்பன் எதிர்வந்து ஆடிடுவார்
கானந்தான் உன்செவி கேட்கலையோ - சாமி
தானந்தான் உன்கைகள் போடலையோ (தந்தனதான)

போடலையோ கண்கள் தேடலையோ - சாமி
பொங்கி எழமனம் நாடலையோ
கூடலையோ நல்ல கூட்டத்தில் சாமிகள்
பாடலையோ பக்திப்பாடல்களை (தந்தனதான)

பாடலைப்பாடும் பெரியோரே - சிறு
பாலகன் பாடிய கும்மிகளில்
கூடல் குறைகள் இருந்தாலும் நீங்கள்
கொண்டு மனம் பொறு சாமிகளே (தந்தனதான)

சாமிகள் வாழி தலம் வாழி முருகன்
சன்நிதி வாழி மலை வாழி
கூவிடும் சேவல் கொடி வாழி தீர்த்த
வாவிகள் கங்கைகள் வாழியவே (தந்தனதான)

வாழிய மட்டுநகர் வாழி - தமிழ்
வையகம் வாழி எம் தாய் வாழி
வாழிய நல்கவி தந்தவிநாயக
சாமியாம் மூர்த்தியும் வாழியவே (தந்தனதான)

கங்கை அணிந்த நல்மால் போற்றி சிவ
மங்கை பராசக்தி தாள் போற்றி
எங்கும் சிவமயம் உண்டாக நீறு
தங்கித் தரித்தவர் தாள் போற்றி (தந்தனதான)

சுபம்

திருகதிர்காம முருகன் திருவழிநடைக்கும்மி முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பஜனைப் பாடல்கள்

**ஓம் சரவணபவ**

**சரவண பவ சரவண பவ சரவணபவ ஓம் நமோ**
**சரவண பவ சரவண பவ சரவணபவ ஓம் நமோ**

அருவே உமையின் சிவமே உருவே
திருவே முருகா ஓம் நமோ
அழகா மருகாகுழகா வருக
அமரர் வாழ்வே ஓம் நமோ - சரவண பவ

கருவே கழலே கதிரே மணியே
கந்தா வருக ஓம் நமோ
கருணை வடிவே அருணை மலையே
கனியே வருக ஓம் நமோ - சரவண பவ

அடியார் உள்ளத் துறையும் அரும்பே
ஆடும் மயிலில் ஓடிவா
பிடியின் தெய்வ யானை மகிழும்
பிரணவ முரை ஓம் நமோ - சரவண பவ

கதிரமலையே கார்த்திகேயா
கடம்பா இடும்பா ஓம் நமோ
அதிர சூரர் சதிர்கள் ஆடும்
அயில் வேற் கரனே ஓம் நமோ - சரவண பவ

அறுபடை உறை திரு முருகனே
அன்பே வள்ளிக் கிணையே வா
குறு நடைபயில் கணபதிக் கிளைய
குழந்தாய், குமார ஓம் நமோ - சரவண பவ

தில்லைவேலனே அல்லல் போக்கும்
திருக்குமாரா ஓம் நமோ
தினமும் பாடி உனையே நாட
திருவடி சரண் ஓம் நமோ - சரவண பவ

சரணம் முருகா வரணும் ஆடி
அடியார் பாட ஓம் நமோ
பரனும் உமையும் மகிழும் குமரா
பாது காத்தருள் ஓம் நமோ - சரவண பவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

திருச்சிற்றம்பலம்

# வேலின் ஒளி

ஒளி ஒளி ஒளி ஒளி வேலின் ஒளி
ஒளிர்விடு அவனடி இணையடியே
பணி பணி பணி பணி முருகனையே
பாவ மகன்றிடும் பாரடியே - ஒளி

சிவ சிவ சிவ சிவ சண்முகனைத்
தினம் தினம் தினம் தினம் போற்றடியே
பவனொளி பவாய நமவெனவே
பாடியே பரவச மடையடியே - ஒளி

அணி அணி அணி அணி நீறதனை
அறுமுகக் கடவுளை பணியடியே
துணி துணி துணி துணி வேல் மயிலும்
துணை என மனதினில் நினையடியே - ஒளி

வேல் வேல் வேல் வேல் வெற்றி வேலனென்று
வேண்டியே பணிந்திட வாருமடி
பல கால் கால் முருகா என்றிடவே
பரிவுடன் அருள்தரு குமரனடி - ஒளி

அருள் அருள் அருள் அருள் வடிவேலா
அடியவர் குறைகளை அகற்றிடவா
இதயத்தில் இருளற வேல் விடுத்து
இனிய உன் அருள் மழைபொழி முருகா - ஒளி

காலையில் மாலையில் பகல் முழுதும்
கண்ணயர் தூங்கும் இரவினிலும்
வினைவரும் தனிவழி நேரத்திலும்
வீரவேல் துணைதரும் போற்றடியே - ஒளி

அரகர முருகா அரோகரா
அரிதிரு முருகா அரோகரா
திருவருள் சரணம் அரோகரா
திருவே சரணம் அரோ கரா - ஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல்முருகா வேல்

உகந்தைமலை நாதனே வேல் முருகா வேல்
உமையவளின் பாலகனே வா முருகா வா
அருந்தமிழ்த் தெய்வமே வேல் முருகா வேல்
அம்மை சிவ பாலகனே வா முருகா வா - உகந்தைமலை

சினந்தெதிர்த்த சூரர்தனை வேல் முருகா வேல்
சிரமறுத்த வேலுடனே வா முருகா வா
கனல்தெறிக்க மலையறுத்த வேல் முருகா வேல்
கண்டு தொழ எங்களெதிர் வா முருகா வா - உகந்தைமலை

மலைஏறிச் சுனையாடி வேல் முருகா வேல்
மழலை உன்னைக் காணவந்தோம் வா முருகா வா
அலைகடல் எதிர்மலை சூழும் வேல் முருகா வேல்
அமர்ந்திருந்த கதிர்வடிவே வா முருகா வா - உகந்தைமலை

அன்பர் நெஞ்சில் கொண்டாடும் வேல் முருகா வேல்
அழகு திருக்குழந்தையப்பா வா முருகா வா
இன்பமற்ற வாழ்வருள வேல் முருகா வேல்
இளமதியே வளர்மதியே வா முருகா வா - உகந்தைமலை

மயிலில் மீது தேர்ப்பவனி வேல் முருகா வேல்
வருவார்காண ஆயிரம்பேர் வா முருகா வா
கைலைநாதர் தன்மகனே வேல் முருகா வேல்
கணபதிக்கிளையவனே வா முருகா வா - உகந்தைமலை

பண்டுதொட்டு தொண்டர் கூட்டம் வேல் முருகா வேல்
உன் பதிதனிலே மிகவோங்க வா முருகா வா
அண்டர் போற்றும் உகந்தமலை வேல் முருகா வேல்
ஆளும் எங்கள் முருகோனே வா முருகா வா - உகந்தைமலை

துதிப்போர் நெஞ்சில் குதித்தாடும் வேல் முருகா வேல்
சுந்தரனே சந்திரனே வா முருகா வா
மதிப்போர் தினம் படிப்போர்க்கு வேல் முருகா வேல்
வரமளித்து பயமகற்ற வா முருகா வா - உகந்தைமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

# அரக ரோகரா

அரக ரோகரா முருகா அரக ரோகரா அரக ரோகரா முருகா அரகரோகரா மால் மருகா வேல்முருகா அரகரோகரா கால்பிடித்தோம் கணபதியே அரகரோகரா

சரவணனே சண்முகனே - அரகரோகரா
வர மருளும் குருபரனே - அரகரோகரா
முத் தமிழே ரெத்தினமே - அரகரோகரா
வித்தகனே வேண்டுகிறோம் - அரகரோகரா (மால் மருகா)

தத்தி மிதித்தோம் தகிங்கிணத்தோம் - அரகரோகரா
தாந்தி மிதித்தோம் மயிலாட - அரகரோகரா
தித்தி மித்தா கால்தூக்கி - அரகரோகரா
திரு நடனம் ஆடிடவா - அரகரோகரா (மால் மருகா)

நீறழகா விழியழகா - அரகரோகரா
நின்மயனே என்னையனே - அரகரோகரா
வேலழகா மெய்யழகா - அரகரோகரா
வேண்டுகிறோம் வா முருகா - அரகரோகரா (மால் மருகா)

ஆறழகா விழியழகா - அரகரோகரா
அவ்வை கனி சொல்லழகா - அரகரோகரா
பாரழகா பன்னிரு கை - அரகரோகரா
பக்தர் குறை தீர்த்திடவா - அரகரோகரா (மால் மருகா)

சுற்றிவரு கோள் பகையும் - அரகரோகரா
தொடரும் பிணி ஓட அருள் - அரகரோகரா
வெற்றி வடிவேல் முருகா - அரகரோகரா
வித்தகனே இத்தினம் வா - அரகரோகரா (மால் மருகா)

அப்பனே உன் சன்நிதியில் - அரகரோகரா
ஆடுதுபார் காவடிகள் - அரகரோகரா
சுப்பனே ஒளி சோதியே வாவா - அரகரோகரா
தோத்தரித்தோம் வேலவனே - அரகரோகரா (மால் மருகா)

அரகரோகரா முருகா அரகரோகரா
அரோகரா முருகா அரகரோகரா
மால் முருகா வேல் முருகா அரகரோகரா
கால் பிடித்தோம் கணபதியே அரகரோகரா (மால் மருகா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகா வா

கண்ணின் மணியே கந்தா வா கருணைக் கடலே அப்பா வா
விண்ணின் வெயிலே ஒளியே வா விரியும் கமல முகமே வா
தன்னாரமுதத் தமிழே வா தவழும் ஞானப் பழமே வா
வண்ணவடிவே குமரா வா வளரும் அருளே பொருளே வா
(கண்ணின்)

உண்ணே உயிரே உறவே வா உயிரின் கலந்த உணர்வே வா
பண்ணின் இசையே பரிதே வா பாடும் தமிழே அமுதே வா
மண்ணின் மலரும் மணமே வா வளரும் நிலவே மதியே வா
கண்ணின் மணியே கந்தா வா கருத்தில் இருக்கும் கவியே வா
(கண்ணின்)

அன்பும் அறமும் அருளவே வா அமைதி எங்கும் நிலையத்தா
பண்புடன் தொண்டர் பெருகிடவே பாடும் அடியார் கூடிடவே
துன்பம் தொலையத் துணிவைத்தா துணிவின் கலந்த துரையே வா
இன்பம் ஊற்றே இறைவா வா என்னுள் கலந்த காற்றே வா
(கண்ணின்)

எங்கள் இதயக்கனியே வா இடரும் பகைமை மடியவே வா
தங்கத்தமிழே முருகா வா தருமக்கொடையே தருகவே வா
பங்கப்படாது எமது மொழி பலகால் வளரக் குமரா பார்
எங்கும் முருகா உன்நாமம் இனிதாய் வீசும் புயலே வா
(கண்ணின்)

மதியே மலரே மணமே வா - மருவும் சோலைப் பழமே வா
விதியை வெல்லும் வேலே வா - விண்ணோர் போற்றும் முருகா வா
கதிதந்தாள்வாய் கண்ணுதலே - கலியுகவரதா கந்தா வா
துதிப்போர் இடர்கள் தொல்லையற சுந்தரமுருகா துரையே வா
(கண்ணின்)

அவ்வை அருணகிரியார்போல் அடியேன் பாட அமுதைத் தா
உவ்வும் மவ்வும் ஓம் முருகா ஒளிரும் சவ்வும் எனவே வா
அவ்வும் அருணை மலைவாழ்வே ஐயா தங்கவேலா வா
கூவும் சேவற்கொடியோனே குழந்தாய் பாலக்குமாரா வா
(கண்ணின்)

சிறிங்க பொய்கைச் சரவணனே சிவாயா உபாயம் தருபவனே
வங்கவடிவேல் அறுமாது வளர்த்த பவளக்குழந்தாய் வா
எங்கும் இலங்கும் ஒளிப்பிழம்பே என்னப்பா சுப்பா இப்போ வா
அங்கம் அழியும் முருகா என் ஆத்மா உனக்கே அடைக்கலமே
(கண்ணின்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

## உகந்தை முருகனைப் பாடு

பாடு பாடு பாடு பாடு முருகனைப் பாடு
உகந்தை முருகனைப் பாடு
உன் பாவவினை நோய்கள் ஓடு நாமத்தை கேட்டு
முருகன் நாமத்தை கேட்டு பாடுபாடு

தேடு தேடு தேடு தேடு புண்ணியம் தேடு
பல நன்மைகள் தேடு
நீ போவளிக்கு கை கொடுக்கும் உண்மையே பாடு
முருகன் பொன்னடி தேடு பாடுபாடு

நாடு நாடு நாடு நாடு தலங்களை நாடு
முருகப் பதியினை நாடு
என் நாளு மவன் நாமம்பாடி ஆலயம் சுற்று
முருகன் ஆலயம் சுற்று பாடுபாடு

ஆடு ஆடு ஆடு ஆடு காவடி ஆடு
முருகன் வீதியில் ஆடு
உன் ஆணவங்கள் அழிப்பதற்கு தீர்த்தல்கள் ஆடு
புனித தீர்த்தல்கள் ஆடு பாடுபாடு

காடு காடு காடு காடு நடைவளி காடு
உன் மனதிலும் காடு
அக்காட்டை வெட்டி அன்பு ஒளி நீபாரு
நெஞ்சில் ஏற்றி நீ பாடு பாடுபாடு

ஓடு ஓடு ஓடு ஓடு ஊற்றெடுத் தோடு
நல்ல ஊற்றெடுத்தோடு
அந்த ஊற்றினிலே நீ நனைந்து உத்தமனாகு
முருகப் பக்தனுமாகு பாடுபாடு

வீடு வீடு வீடு வீடு ஆறுபடைவீடு
முருகன் ஆறுபடைவீடு
அந்த வீட்டினிலே ஒன்றெடுத்து குடிபுகப் பாரு
முருகன் அனுமதி கேட்டு பாடுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

# திரு முருகன் திரு வழிநடை உந்துதல்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முருகனுக்கு | - | அரோகரா | - | முதல்வனுக்கு | - | அரோகரா |
| குமரனுக்கு | - | அரோகரா | - | முருகனுக்கு | - | அரோகரா |
| அழகனுக்கு | - | அரோகரா | - | அமலனுக்கு | - | அரோகரா |
| அமரனுக்கு | - | அரோகரா | - | அமுதனுக்கு | - | அரோகரா |
| பாலனுக்கு | - | அரோகரா | - | கோலனுக்கு | - | அரோகரா |
| வேலனுக்கு | - | அரோகரா | - | வேந்தனுக்கு | - | அரோகரா |
| காடனுக்கு | - | அரோகரா | - | கந்தனுக்கு | - | அரோகரா |
| வேடனுக்கு | - | அரோகரா | - | விருத்தனுக்கு | - | அரோகரா |
| ஆடும்மயிலுக்கு | - | அரோகரா | - | கூவும்சேவலுக்கு | - | அரோகரா |
| பாடனுக்கு | - | அரோகரா | - | பக்தனுக்கு | - | அரோகரா |
| சரவணனுக்கு | - | அரோகரா | - | சண்முகற்கு | - | அரோகரா |
| இனியவனுக்கு | - | அரோகரா | - | இறைவனுக்கு | - | அரோகரா |
| கனிவாயனுக்கு | - | அரோகரா | - | கதிர்காமனுக்கு | - | அரோகரா |
| கிழவனுக்கு | - | அரோகரா | - | குறவனுக்கு | - | அரோகரா |
| மறவனுக்கு | - | அரோகரா | - | மாறனுக்கு | - | அரோகரா |
| ஆறுமுகனுக்கு | - | அரோகரா | - | திருமுகனுக்கு | - | அரோகரா |
| ஒருமுகனுக்கு | - | அரோகரா | - | திருமால்மருகனுக்கு | - | அரோகரா |
| ஐயனுக்கு | - | அரோகரா | - | மெய்யனுக்கு | - | அரோகரா |
| ஐயங்கரனுக்கு | - | அரோகரா | - | அம்மைஅப்பனுக்கு | - | அரோகரா |
| துய்யனுக்கு | - | அரோகரா | - | பன்னீர்க்கையனுக்கு | - | அரோகரா |
| வீரனுக்கு | - | அரோகரா | - | தீரனுக்கு | - | அரோகரா |
| சூரனுக்கு | - | அரோகரா | - | சுப்பிரமணியனுக்கு | - | அரோகரா |
| காலனுக்கு | - | அரோகரா | - | ஆலனுக்கு | - | அரோகரா |
| மாலனுக்கு | - | அரோகரா | - | மன்னனுக்கு | - | அரோகரா |
| சித்தனுக்கு | - | அரோகரா | - | முத்தனுக்கு | - | அரோகரா |
| காவடிக்கு | - | அரோகரா | - | சேவடிக்கு | - | அரோகரா |
| சூலாயுதத்திற்கு | - | அரோகரா | - | வேலாயுதத்திற்கு | - | அரோகரா |
| வெற்றிவேலுக்கு | - | அரோகரா | - | வீரவேலுக்கு | - | அரோகரா |
| சக்திவேலுக்கு | - | அரோகரா | - | முத்துவேலுக்கு | - | அரோகரா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தில்லைவேலுக்கு | - | அரோகரா | - | திருக்கைவேலுக்கு | - | அரோகரா |
| சோதிவேலுக்கு | - | அரோகரா | - | ஞானவேலுக்கு | - | அரோகரா |
| கதிரைவேலுக்கு | - | அரோகரா | - | பழனிவேலுக்கு | - | அரோகரா |
| தங்கவேலுக்கு | - | அரோகரா | - | தணிகைவேலுக்கு | - | அரோகரா |
| குழந்தைவேலுக்கு | - | அரோகரா | - | குமாரவேலுக்கு | - | அரோகரா |
| வண்ணவேலுக்கு | - | அரோகரா | - | வடிவுவேலுக்கு | - | அரோகரா |
| சித்திரவேலுக்கு | - | அரோகரா | - | ரெத்தினவேலுக்கு | - | அரோகரா |
| தீரவேலுக்கு | - | அரோகரா | - | செவ்வேளுக்கு | - | அரோகரா |
| அறுகோணத்துக்கு | - | அரோகரா | - | திருநீற்றுக்கு | - | அரோகரா |
| உத்திராட்சைக்கு | - | அரோகரா | - | ஓம்முருகனுக்கு | - | அரோகரா |
| அத்தனுக்கு | - | அரோகரா | - | சித்தனுக்கு | - | அரோகரா |
| வள்ளியர்க்கு | - | அரோகரா | - | புள்ளிமயிலுக்கு | - | அரோகரா |
| தேவையானைக்கு | - | அரோகரா | - | தேவசேனாதிபதிக்கு | - | அரோகரா |
| சேவலுக்கு | - | அரோகரா | - | மாமயிலுக்கு | - | அரோகரா |
| மகரனுக்கு | - | அரோகரா | - | சிகரனுக்கு | - | அரோகரா |
| விகரனுக்கு | - | அரோகரா | - | அகரனுக்கு | - | அரோகரா |
| அண்ணனுக்கு | - | அரோகரா | - | விண்ணனுக்கு | - | அரோகரா |
| வள்ளலுக்கு | - | அரோகரா | - | கள்ளனுக்கு | - | அரோகரா |
| ஒளியனுக்கு | - | அரோகரா | - | ஈராறுவிழியனுக்கு | - | அரோகரா |
| தலைவனுக்கு | - | அரோகரா | - | தனயனுக்கு | - | அரோகரா |
| அமுதவாயனுக்கு | - | அரோகரா | - | பவளவாயனுக்கு | - | அரோகரா |
| வாரணர்க்கு | - | அரோகரா | - | காரணர்க்கு | - | அரோகரா |
| கடம்பனுக்கு | - | அரோகரா | - | இடும்பனுக்கு | - | அரோகரா |
| ஞானபண்டிதற்கு | - | அரோகரா | - | ஆண்டிஅப்பனுக்கு | - | அரோகரா |
| நீலனுக்கு | - | அரோகரா | - | தீரனுக்கு | - | அரோகரா |
| மாலனுக்கு | - | அரோகரா | - | மன்னனுக்கு | - | அரோகரா |
| திருத்தணிகைக்கு | - | அரோகரா | - | திருச்செந்தூர்க்கு | - | அரோகரா |
| குன்றத்திற்கு | - | அரோகரா | - | ஆவினங்குடிக்கு | - | அரோகரா |
| திருவேரகத்திற்கு | - | அரோகரா | - | பழமுதிர்ச்சோலைக்கு | - | அரோகரா |
| அருணகிரிக்கு | - | அரோகரா | - | அவ்வையர்க்கு | - | அரோகரா |
| திருப்புகழ்க்கு | - | அரோகரா | - | திருமுருகாற்றுப்படைக்கு | - | அரோகரா |
| பொங்கியர்க்கு | - | அரோகரா | - | பூவையர்க்கு | - | அரோகரா |
| அன்னையர்க்கு | - | அரோகரா | - | அடியார்க்கு | - | அரோகரா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சச்சிதாநந்தனுக்கு | - | அரோகரா | - | பலாநந்தனுக்கு | - | அரோகரா |
| குருவினுக்கு | - | அரோகரா | - | குருநாதனுக்கு | - | அரோகரா |
| சத்துருசங்கானுக்கு | - | அரோகரா | - | சகலகலைநாதனுக்கு | - | அரோகரா |
| சித்திதருபவனுக்கு | - | அரோகரா | - | தீதநயாழனுக்கு | - | அரோகரா |
| முத்தமிழுக்கு | - | அரோகரா | - | மூவிருமுகத்தனுக்கு | - | அரோகரா |
| திருக்குமரனுக்கு | - | அரோகரா | - | அருள்குமரனுக்கு | - | அரோகரா |
| தண்டாயுதபாணிக்கு | - | அரோகரா | - | அண்டநாயனுக்கு | - | அரோகரா |
| சுவாமிமலைக்கு | - | அரோகரா | - | கதிரமலைக்கு | - | அரோகரா |
| எழுமலைக்கு | - | அரோகரா | - | கழுகுமலைக்கு | - | அரோகரா |
| பழனிமலைக்கு | - | அரோகரா | - | பாரமலைக்கு | - | அரோகரா |
| கந்தமலைக்கு | - | அரோகரா | - | கடம்புமலைக்கு | - | அரோகரா |
| அருணைமலைக்கு | - | அரோகரா | - | கருணைமலைக்கு | - | அரோகரா |
| உகந்தமலைக்கு | - | அரோகரா | - | தாந்தாமலைக்கு | - | அரோகரா |
| வள்ளிமலைக்கு | - | அரோகரா | - | கொள்ளிமலைக்கு | - | அரோகரா |
| சோலைமலைக்கு | - | அரோகரா | - | நாகமலைக்கு | - | அரோகரா |
| பச்சைமலைக்கு | - | அரோகரா | - | பவளமலைக்கு | - | அரோகரா |
| சூரன்மலைக்கு | - | அரோகரா | - | சன்யாசிமலைக்கு | - | அரோகரா |
| திருமலைக்கு | - | அரோகரா | - | பெருமலைக்கு | - | அரோகரா |
| நாகமலைக்கு | - | அரோகரா | - | தணிகைமலைக்கு | - | அரோகரா |
| அண்ணாமலைக்கு | - | அரோகரா | - | விராவிமலைக்கு | - | அரோகரா |
| தில்லைமண்டூர் | - | அரோகரா | - | திருக்கோயிலுக்கு | - | அரோகரா |
| சித்தாண்டிக்கு | - | அரோகரா | - | வெருகலுக்கு | - | அரோகரா |
| வழிநடைக்கு | - | அரோகரா | - | தனிவழிக்கு | - | அரோகரா |
| பாதவழிக்கு | - | அரோகரா | - | பார்முருகா | - | அரோகரா |
| சரவணபவனுக்கு | - | அரோகரா | - | சயனொளிபவனுக்கு | - | அரோகரா |
| திருபுவனபவனுக்கு | - | அரோகரா | - | திகனொளிபவனுக்கு | - | அரோகரா |
| பரிபுரபவனுக்கு | - | அரோகரா | - | பவனொளிபவனுக்கு | - | அரோகரா |
| அரிதிருமருகனுக்கு | - | அரோகரா | - | ஆறுமுகநாதனுக்கு | - | அரோகரா |
| சரணம்அப்பா | - | அரோகரா | - | எதிர்வரணுஅப்பா | - | அரோகரா |
| பாடுவோர்க்கு | - | அரோகரா | - | முருகனை நாடுவோர்க்கு | - | அரோகரா |
| போற்றி அப்பா | - | அரோகரா | - | போற்றி போற்றி | - | அரோகரா |

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக் கதிர்காம முருகன்

# வழிநடைக் கும்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org